[2013 *மார்ச்* 26

**64—**

**நல வாரியம்**

***7239—திரு. ரா. சரத்குமார்:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் மூத்த குடிமக்களுக்கு நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) 2007 ஆம் ஆண்டின் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தினை மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் சிறப்பாகவும், இணைந்து செயல்படுத்தவும் ஆலோசனை வழங்குவதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாநில அளவில் அரசு தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்டு 15 அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றும், மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 2 மூத்த குடிமக்கள் உட்பட 4 அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டு மூத்த குடிமக்களின் நலன் பேணப்படுகிறது. எனவே, மூத்த குடிமக்களுக்கு நல வாரியம் அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் அவர்களால் எழுப்பப்பட்ட வினாவிற்குப் பேச அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு*

2013 மார்ச் 26]

அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக சில கருத்துகளை அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன். இன்றைய சமூகச் சூழ்நிலையில் கூட்டுக் குடும்பம் தனிக் குடும்பமாக மாறிவிட்டது. வயது முதிர்ச்சி, வருமானம் குறைவு, பாதுகாப்பு இல்லாமை ஆகிய காரணங்களால் துன்பப்படும் முதியோர்களின் கவலைகளைத் தீர்க்க இருக்கும் சட்டத்தினை அடிப்படை உரிமைச் சட்டமாக மாற்றிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் அவர்களை ஆதரவற்றவர்களாக யாரும் கருதக் கூடாது என்பதற்காக, அரசாங்கமே அவர்களுக்குப் பாதுகாவலராக இருக்கும் என்பதை மனதிலே வைத்துத்தான், ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் முதியோர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையினை 500 ரூபாயிலே இருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி ஆணை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலில் முதியோர் ஓய்வூதியத் திட்டம் என்பது 1962 ஆம் ஆண்டு வெறும் 20 ரூபாய் ஓய்வூதியத் தொகையுடன்தான் துவங்கப்பட்டது. அதற்குப் பிறகு படிப்படியாக அது 400 ரூபாய், 500 ரூபாய் என்று உயர்த்தப்பட்டு, 500 ரூபாய் என்ற அளவோடு நிறுத்தப்பட்டதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு 8 ஓய்வூதியத் திட்டங்களைக் கொண்டுவந்து, அது 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டுமென்று ஆணை வழங்கி, அதனடிப்படையிலே முதியோர்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாநில அளவிலே தீர்ப்பாயங்கள், மாவட்ட அளவிலே மற்றும் வட்டார அளவிலே அமைக்கப்பட்டிருக்கிற குழுக்கள் மூலமாக வைக்கப்படக்கூடிய பரிந்துரைகளின் அடிப்படையிலே பல்வேறு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டத்தின் மூலமாக யாராவது ஒரு முதியவர் தனக்குப் பாதுகாப்பு இல்லையென்று புகார் தருவாரேயானால், உடனடியாக 90 நாட்களுக்குள் அவருடைய புகாருக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பது குறித்தும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மூத்த குடிமக்கள் அவர்களுடைய பிள்ளைகள், உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்தத் தவறினால், அபராதம் மற்றும் சிறை தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவிற்கு ஏற்றாற்போன்றோ வழங்கத் தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரையோ சிறை தண்டனை அளிக்கப்படலாம்.

அதுமட்டுமல்ல, பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு 10,000 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பாயத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. விசாரணை நிலுவையில் இருக்கும்பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்குத் தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம் என்பது போன்ற பல்வேறு ஆலோசனைகள் அந்தத் தீர்ப்பாயத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, முதியோர்களைப் பாதுகாப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உறுதியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முதியோர்களுக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களால் முதியோர் ஒருங்கிணைந்த வளாகம் என்று தொடங்கப்பட்டு, இன்றைக்கு மிகச் சிறப்போடு, அதுவும் முதியோர்களுக்குப் பாதுகாப்பான ஓர் இல்லமாக தமிழ்நாட்டின் பல இடங்களிலே நடத்தப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த அவையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.